**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்**

**தேதி 05.08.2025 நேரம் மாலை 6.10 மணி**

**------------------------------------------------------------------------------------------**

*தலைப்புச் செய்திகள்*

இந்தியாவும், பிலிப்பைன்-சும், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மற்றும் பிலிப்பைன்ஸ் அதிபர் முன்னிலையில், 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக் கொண்டுள்ளன.

வேளாண் துறையில், அரசின் தொடர்ச்சியான சீர்திருத்தங்கள், மற்றும், விவசாயிகளை மையமாக கொண்ட முன் முயற்சிகளால், நிலையான வளர்ச்சி ஏற்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

படைப்புத் திறன்சார் ஆரஞ்சுப் பொருளாதாரத்தை மேம்படுத்த, அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

புதுச்சேரி ஜிப்மரில், **ஜிப்மர் ஏனாம் கிளை**க்கான **தொலைநிலை மருத்துவ சேவை**களை, ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நெகி இன்று தொடக்கி வைத்தார்.

**-------------------------**

*பிலிப்பைன்ஸ் 1* (10)

இந்தியாவும், பிலிப்பைன்-சும், இன்று புதுடெல்லியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. ஃபெர்டினாண்ட் மார்க்கோஸ் ஜூனியர் ஆகியோர் முன்னிலையில், 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக் கொண்டுள்ளன. பாதுகாப்பு, அறிவியல்-தொழில்நுட்பம், குற்றவியல் பிரச்சனைகளில் பரஸ்பர சட்ட உதவி ஆகியவை தொடர்பான ஒப்பந்தங்கள் இதில் அடங்கும். இந்தியாவும், பிலிப்பைன்-சும், தூதரக உறவுகளின் 75ஆம் ஆண்டை கொண்டாடி வரும் நிலையில், பிலிப்பைன்ஸ் அதிபரின் இந்தியப் பயணம், சிறப்பு வாய்ந்தது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். செய்தியாளர் கூட்டம் குறித்து கூடுதல் விவரங்கள்.....

**(வாய்ஸ்)**

*பிலிப்பைன்ஸ் 2* (14)

**<u>(வாய்ஸ்)</u>**

<u>தீவிரவாதத்தை எதிர்ப்பதில், பிலிப்பைன்ஸ் இந்தியாவின் பக்கம் நிற்பது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி நன்றி தெரிவித்துக் கொண்டார். இருநாடுகளுக்கும் இடையிலான மேம்பாட்டு ஒத்துழைப்பின் ஒருபகுதியாக,</u>

பிலிப்பைன்சில், துரிதமான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய இந்திய திட்டங்களின் எண்ணிக்கை உயர்த்தப்படும் என்று அவர் தெரிவித்தார். இந்தியாவிற்கும், ஆசியான் நாடுகளுக்கும் இடையிலான, வரியில்லா வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து இறுதி செய்ய, உயர் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. மார்க்கோஸ் ஜூனியர், இந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில், இந்தியாவின் சிறப்பான விருந்தோம்பலுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, இந்தியாவின் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் மூலம், பிலிப்பைன்சிலும் பாதுகாப்புத் துறை, வேகமாக நவீனமாகி வருவது குறித்து, அவர் திருப்தி வெளியிட்டார்.

-------------------------

*நாடாளுமன்றம் (18)*

நாடாளுமன்றத்தில் இன்று, பல்வேறு பிரச்சனைகள் குறித்து, எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, இரு அவைகளிலும் அலுவல்கள், முதலில் ஒருமுறையும், பின்னர், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. குறிப்பாக, பீகார் மாநிலத்திற்கான சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் குறித்து விவாதிக்க வேண்டும் என, இரு அவைகளிலும், எதிர்கட்சிகள் வலியுறுத்தின. கோவா சட்டமன்றத்தில், பழங்குடிப் பிரிவினருக்கு பிரதிநிதித்துவம் அளிப்பதற்கான மசோதா, இன்று மக்களவையில் அமளிக்கு இடையிலேயே நிறைவேற்றப்பட்டது. முன்னாள் ஜார்கண்ட் முதலமைச்சர் சிபு சோரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திலக்தாரி சிங், ராம் ரதி பீந்த் ஆகியோரின் மறைவிற்கு, முன்னதாக அவையில் இரங்கல் தெரிவிக்கப் பட்டது. மாநிலங்களவையில், அமளிக்கு இடையிலேயே, மணிப்பூரில், குடியரசுத் தலைவர் ஆட்சியை மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிப்பதற்கான, சட்டப்பூர்வத் தீர்மானம், குரல் ஓட்டு மூலம் நிறைவேற்றப்பட்டது. எதிர்கட்சிகளின் அமளியினால், நடப்புக் கூட்டத் தொடரில் ஏற்கனவே, 41 மணி நேர அலுவல்கள் வீணாகி விட்டதாக, துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ் கூறினார். முன்னதாக, முன்னாள் உறுப்பினர் ப்ரவீன் நாயக் மறைவு குறித்து, அவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

-------------------------

*மோடி-வேளாண்மை* (15)

இந்தியாவின் வேளாண் துறையில், தொடர்ச்சியான சீர்திருத்தங்கள், மற்றும், விவசாயிகளை மையமாக கொண்ட பல்வேறு முன் முயற்சிகளால், நிலையான வளர்ச்சி ஏற்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். 2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதற்கான விக்சித் பாரத் இலக்குகளை எட்டுவதில், வேளாண் துறையின் வளர்ச்சி, முக்கிய பங்கு வகிக்கும் என்றும், அவர் கூறியுள்ளார். இதுதொடர்பாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான் எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். வேளாண் துறை இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு மட்டுமே அல்ல என்றும், வலுவான, சுயசார்பு இந்தியா ஒன்றை உருவாக்குவதற்கான

அடித்தளமே வேளாண் துறைதான் என்றும், அமைச்சர் திரு. சௌகான், தமது கட்டுரையில் கூறியுள்ளார். விவசாயிகளின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்தியும், வேளாண் துறையில் புதுமைகளை ஊக்குவித்தும், இந்தியா முன்னேறிய நாடு என்னும் இலக்கை நோக்கி, விரைந்து பயணித்து வருவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

-------------------------

*கர்த்தவ்ய பவன் (11)*

தலைநகர் டெல்லியில், பல்வேறு மத்திய அமைச்சகங்கள் ஒரே இடத்தில் செயல்பட ஏதுவாக கட்டப் பட்டுள்ள, 3ஆம் கட்ட கர்த்தவ்ய பவன் கட்டடத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை திறந்து வைக்கிறார். ஒன்றரை சதுர மீட்டர் பரப்பளவில், நவீன முறையில் கட்டப் பட்டுள்ள இந்த 6 மாடிக் கட்டிடத்தில், மத்திய உள்துறை, வெளியுறவுத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, பெட்ரோலியத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலகங்கள் செயல்பட உள்ளன. முக்கிய துறைகள் ஒரே இடத்தில் செயல்படுவதால், செயல்திறன், பரஸ்பர ஒருங்கிணைப்பு, மற்றும், புதுமையாக்க முயற்சிகள் மேம்பட ஏதுவாகும் என்று, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. மனோகர் லால், இன்று புதுடெல்லியில், செய்தியாளர் கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

-------------------------

முருகன் (10)

கேளிக்கைத் துறைக்கு மத்திய அரசு, உயர் முன்னுரிமை அளிப்பதாகவும், படைப்புத் திறன்சார் ஆரஞ்சுப் பொருளாதாரத்தை மேம்படுத்த, பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், மாநிலங்கள், மற்றும், யூனியன் பிரதேசங்களின் மக்கள் தொடர்புத் துறைச் செயலர்களுக்கு இடையிலான, முதலாவது தேசிய மாநாட்டின் தொடக்க விழாவில் அவர் உரையாற்றினார்.

மக்கள் தொடர்பு பணிகளில் உருவாகி வரும் புதிய சவால்களை, பரஸ்பரம் விவாதித்துப் புரிந்து கொள்ள, மக்கள் தொடர்புத் துறைச் செயலர்கள் மாநாடு, மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று செய்தி-ஒலிபரப்புத் துறைச் செயலர் திரு. சஞ்சய் ஜாஜூ கூறினார்.

-------------------------

ஜிப்மர் (10)

புதுச்சேரி ஜிப்மரில், **ஜிப்மர் ஏனாம் கிளை**க்கான **தொலைநிலை மருத்துவ சேவை**களை, ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நெகி இன்று தொடக்கி வைத்தார். **தொலைநிலை ஆலோசனை வசதி**களுடன் கூடிய, ஜிப்மர் **டெலி ஆம்புலன்ஸ் சேவை**, மற்றும், ஜிப்மர் அவசர சிகிச்சை பிரிவில், நோயாளிகளின் ஆலோசனை அடிப்படையில் சேவை தரத்தை மேம்படுத்துவதற்கான **ஆன்-லைன் பின்னூட்ட**

**மையங்**களையும், அவர் தொடக்கி வைத்தார். ஜிப்மரில் எந்தெந்தப் பிரிவு, எங்கே உள்ளது என்பதை, நோயாளிகள், மற்றும், உதவியாளர்கள் எளிதில் தெரிந்து கொள்ள ஏதுவாக, **புதிய செயலி** விரைவில் தொடக்கப்படும் என்றும், ஜிப்மர் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

டெங்கு (9)

மழைக்காலம் தொடங்க உள்ள நிலையில், புதுச்சேரியில், டெங்கு, மற்றும் சிக்குன்குனியா நோய்த் தொற்றை தடுப்பது குறித்த, விழிப்புணர்வு பிரச்சார வாகனங்களை, சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள் இன்று கொடியசைத்து தொடக்கி வைத்தார். புதுச்சேரியில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டு டெங்கு காய்ச்சல் குறைந்துள்ள போதிலும், மழைக்காலம் தொடங்குவதை கருத்தில் கொண்டு, மருத்துவமனைகளில், படுக்கை உள்ளிட்ட எல்லா வசதிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். சுகாதாரத் துறை இயக்குநர் பேட்டியில் இருந்து ஒருபகுதி.....

**(வாய்ஸ்-டாக்டர் செவ்வேள்)**

-------------------------

*ஊர்க் காவல் படை* (10)

புதுச்சேரியில் ஊர்க் காவல் படைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் குறித்து, கடந்த ஆண்டு ஜூலை 1ஆம் தேதி வெளியிடப்பட்ட தகுதிப் பட்டியல் ரத்து செய்யப்பட்டு, சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி, புதிதாக தயாரிக்கப்பட்ட தகுதிப் பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது. ஆள் சேர்ப்புப் பணிகளின் போது, எழுத்துத் தேர்வில் தோல்வி அடைந்த சிலர், பாடத் திட்டத்திற்கு வெளியே கேள்விகள் கேட்கப் பட்டதாகக் கூறி, சென்னை உயர்நீதிமன்றத்தை அணுகி இருந்தனர். 100 வினாக்கள் அடங்கிய கேள்வித் தாளில், கடைசி 15 வினாக்களுக்கு, அனைத்துத் தேர்வர்களுக்கும், 15 மதிப்பெண் அளித்து, புதிய பட்டியலை தயாரிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டு இருந்தது.

-------------------------

*தமிழ்நாடு* (10)

சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில், சுமார் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப் பட்டுள்ள காவல் நிலையத்தை, தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் இன்று, காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். மொத்தம் 18.65 கோடி ரூபாய் மதிப்பிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார். இதற்கிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், இன்று சென்னை தலைமை செயலகத்தில், ஆய்வுக் கூட்டம் நடத்தினார். நீர்

நிலைகள் மற்றும், மழை நீர் வடிகால்களை தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க, அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

-------------------------

*வானிலை* (14)

வளிமண்டல கீழடுக்கு மற்றும் மேலடுக்கு சுழற்சிகள் காரணமாக, இன்றைய தினம் தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சேலம், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழைக்கும், தேனி, தென்காசி மாவட்டங்களில், மிக கனமழைக்கும், கோவை மாவட்ட மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி மாவட்டத்தில், ஓரிரு இடங்களில், அதி கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 11 ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, புதுச்சேரியில் 11 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-------------------------

*குத்துச் சண்டை* (10)

15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான, 4ஆவது சப்- ஜூனியர் தேசிய குத்துச் சண்டை சேம்பியன் பட்டப் போட்டிகள், உத்தரபிரதேஷ் மாநிலம் கிரேட்டர் நொய்டாவில், ஆகஸ்ட் 7 முதல், 13ஆம் தேதி வரை நடைபெறும் என, தேசிய குத்துச் சண்டை கூட்டமைப்பு இன்று அறிவித்துள்ளது. ஆடவர், மகளிர் ஆகிய இரு பிரிவுகளாக நடைபெற உள்ள இப்போட்டிகளில், நாடெங்கிலும் இருந்து, சுமார் 700 இளம் குத்துச் சண்டை வீரர்-வீராங்கனைகள் பங்கேற்க உள்ளனர். அண்மையில், 15 வயது, மற்றும் 17 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான, ஆசிய சேம்பியன் போட்டிகளில், இந்திய குத்துச் சண்டை வீரர்-வீராங்கனைகள், 43 பதக்கங்களை வென்று, பதக்கப் பட்டியலில் இரண்டாமிடம் பிடித்ததும் குறிப்பிடத்தக்கது.

-------------------------

*வரையாடு* (8)

மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் காணப்படும் நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை குறித்த, 2ஆவது கணக்கெடுப்பு அறிக்கையின்படி, தமிழகத்தில், வரையாடுகளின் எண்ணிக்கை, கடந்த ஆண்டை விட, தற்போது 21 சதவிகிதம் அதிகரித்துள்ளது. நீலகிரி சத்தியமங்கலம், முதுமலை உள்ளிட்ட பகுதிகளில், மொத்தம் ஆயிரத்து 303 வரையாடுகள் இருப்பதாக, ஒருங்கிணைந்த கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது. தமிழக வனத்துறை அமைச்சர் திரு. ராஜ கண்ணப்பன், இன்று சென்னையில், செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார்.

-------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்தியாவும், பிலிப்பைன்-சும், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மற்றும் பிலிப்பைன்ஸ் அதிபர் முன்னிலையில், 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக் கொண்டுள்ளன.

வேளாண் துறையில், அரசின் தொடர்ச்சியான சீர்திருத்தங்கள், மற்றும், விவசாயிகளை மையமாக கொண்ட முன் முயற்சிகளால், நிலையான வளர்ச்சி ஏற்பட்டு வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

படைப்புத் திறன்சார் ஆரஞ்சுப் பொருளாதாரத்தை மேம்படுத்த, அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

புதுச்சேரி ஜிப்மரில், **ஜிப்மர் ஏனாம் கிளை**க்கான **தொலைநிலை மருத்துவ சேவை**களை, ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நெகி இன்று தொடக்கி வைத்தார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**